நாள் 12.02.2026 STC 373/2023 அ.சா. 1

**பெயர் கார்த்திக் ராஜா (தலைமை காவலர்)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை)

(1) காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் மாலை ரோந்து பணிக்கு 05.00 மணிக்கு கிளம்பினோம். ரோந்து பணியின் போது உதவி ஆய்வாளர் நாகராஜன், மதுரை வீரன் என்ற காவலர் ஆகியோர் உடன் வந்தார்கள். ரோந்து பணிக்கு உதவி ஆய்வாளர் அவருடைய வாகனத்திலும், நானும் மற்றொரு காவலரும் எனது வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்த போது நான் அவருடன் தான் இருந்தேன். உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் சுமார் 08.00 மணியளவில் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு சுமார் இரவு 08.30 மணிக்கு சென்றோம். கொமரலிங்கம், கொழுமம், பாப்பான்குளம், ரெட்டிபாளையம், ருத்திரபாளையம் ஆகிய பகுதிகளில் ரோந்து சென்றோம். சோதனை செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த இடத்திற்கு அருகில் 2-3 கடைகள் உள்ளது. பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் சாட்சியாக முன் வராததால் சேர்க்கவில்லை.

(2) கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருளை என்ன செய்தோம் என்றால் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து அழித்தல் மகஜர் தயார் செய்து அழித்துவிட்டோம். கைப்பற்றப்பட்ட பொருள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் தெரியாது. புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் உதவி ஆய்வாளர் புகைப்படம் எடுத்தார். எத்தனை பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில் ரோந்து பணியில் ஈடுபடவில்லை என்றும், எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி ஏற்கனவே இதே போன்ற வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியதை தெரிந்து அவரை மீண்டும் விற்கத்

தூண்டி விற்கவில்லை என்றால் வழக்கு போடுவேன் என்று மிரட்டி பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:42:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**பெயர் மதுரை வீரன் (முதல் நிலை காவலர்)**
**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை)

(1) காவல் நிலையத்தில் இருந்து சோதனைக்கு மதியத்திற்கு மேல் கிளம்பிவிட்டோம். நான், அ.சா.1 மற்றும் உதவி ஆய்வாளர் கிளம்பினோம். கொழுமம், பாப்பான்குளம், கொமரலிங்கம் ஆகிய பகுதிகளுக்கு சென்றோம். உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்த போது நாங்கள் மூவரும் கொழுமத்தில் இருந்தோம். சோதனைக்கு அ.சா.1 வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளர் தனியாக வேறு வாகனத்தில் வந்தார். எதிரியின் கடைக்கு சென்ற போது நேரம் 20.30 மணி இருக்கும். சோதனை செய்யப்பட்டதாக சொல்லும் கடையை சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். பொது மக்களை விசாரித்தோம்.

(2) கைப்பற்றப்பட்ட பொருளை உதவி ஆய்வாளர் புகைப்படம் எடுத்தார். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தோம். கைப்பற்றப்பட்ட பொருளை ஆய்வகத்திற்கு அனுப்பினோமா என்றால் தெரியாது. எதிரியின் கடையை ஒட்டி உள்ள அனைத்து கடைகளையும் சோதனை செய்தோமா என்றால் இல்லை. நான் சொன்னபடி, சொன்ன இடத்தில் சோதனை செய்யவில்லை என்றும் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:42:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்